# இந்தியா-பிரான்ஸ் இடையேயான ஆயுதக் குறைப்பு மற்றும் ஆயுதப் பரவல் தடுப்பு பேச்சுவார்த்தை

மார்ச் 04, 2024

ஆயுதக் குறைப்பு மற்றும் ஆயுத பரவல் தடை தொடர்பான இந்தியா-பிரான்ஸ் இருதரப்பு பேச்சுவார்த்தை 2024 மார்ச் 4 அன்று புது தில்லியில் நடைபெற்றது. இதில் அணு ஆயுதம், வேதியியல், உயிரியல் துறைகள், அத்துடன் விண்வெளி பாதுகாப்பு, ராணுவத் துறையில் செயற்கை நுண்ணறிவு (AI) உள்ளிட்ட வழக்கமான ஆயுதங்கள், ஆபத்தான தன்னாட்சி ஆயுத அமைப்புகள் மற்றும் பலதரப்பு ஏற்றுமதி கட்டுப்பாட்டு முறைகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய ஆயுதக் குறைப்பு மற்றும் பரவலைத் தடுக்கும் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து இருதரப்பும் விவாதித்தனர்.

**புது தில்லி**
**மார்ச் 04, 2024**